**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 23.01.2026**
**RLTOP. No. 03/2023**
**வழக்கு சாட்சி RW.1–மனோகரன் , த/பெ.ஸ்ரீராமலு**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என் நிரூபண வாக்குமூலத்திலேயே நான் வாடகைதாரர் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். முன் தொகை மற்றும் மாத வாடகை ஆகியவை பற்றி என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மனுதாரர் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டு சிகிச்சையில் இருந்து வருகிறார் என்றால் சரிதான், 2, 3 வருடங்களாக அவ்வாறு இருக்கிறார். 2017 லேயே மனு சொத்தை விட்டுவிட்டு சேலம் சென்று மனுதாரர் குடியேறிவிட்டார் என்றால் சரிதான். நான் 2001 ம் வருடத்திலிருந்து மனு சொத்தில் வாடகைக்கு உள்ளேன். 2001 ல் இருந்து நான் மனு சொத்தில் வாடகைக்கு இருப்பதை நிரூபிக்க ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) மனுதாரர் அன்பழகன் மீது பவானி நீதிமன்றத்தில் ரூ.10 லட்சத்திற்காக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். நான் நகை அடகு வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மனுதாரர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மனுதாரருக்கு 2006 ல் தான் மனு சொத்து விடுதலை பத்திரம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மனுதாரருக்கே 2006 ல் தான் சொத்து பாத்தியப்பட்டபோது 2001 ல் இருந்து நான் வாடகைக்கு இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அந்த காலகட்டத்தில் மனுதாரர் மனு சொத்திலேயேதான் குடியிருந்தார். அதன் பிறகு தான் சொத்துக்கள் பிரிக்கப்பட்டது.

3) நான் வாடைக்கு இருக்கும் கடை 10 X 10 அடி இருக்கும் என்றால் சரிதான். நான் லட்சுமி கோல்டு பைனான்ஸ் என்ற பெயரில் தான் நடை அடகு வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மனுதாரர் அவருடைய நகைகளை என்னிடம் அடகு வைத்து ரூ. 2.5 லட்சம் கடன் பெற்றுள்ளார் என்றால் இல்லை. மனு சொத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் விஜயா மற்றும் ஷேக் முகமது கோஷ் ஆகியோர்கள் வாடகைக்கு இருந்து தற்போது போகியத்துக்கு இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, ஆரம்பத்திலிருந்தே போகியத்துக்குதான் இருந்து வருகிறார்கள். அந்த போகிய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது எப்போது எழுதப்பட்டது என்றால் தெரியாது. அதில் நான் சாட்சி கையெழுத்து இட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் போகிய பத்திரத்தை பார்த்ததே இல்லை என்றும், வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 16.02.2026 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.